**இரண்டாம் சுகாதார துறை அபிவிருத்தி செயற்திட்டம் - 2013**

இரண்டாம் சுகாதாரத் துறை அபிவிருத்தி செயற்த்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் 2013 ஆகஸ்ட் 19 இல் கைச்சாத்திடப்பட்ட 5228 - எல்கே இலக்க நிதி உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி உடன்படிக்கையின் பிரகாரம், தேசிய மட்டத்திலானவை சுகாதார அமைச்சாலும் (எம்ஓஎச்) மாகாண மட்டத்தில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டன. சுகாதார அமைச்சினால் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விதப்புரைகள் இவ் அறிக்கை கொண்டுள்ளது.

**1.2 செயற்திட்டத்தின் நோக்கங்கள், அமுலாக்கல், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

இரண்டாம் சுகாதாரத் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் 2013 – 2017 க்கான தேசிய சுகாதார அபிவிருத்தி திட்டத்திற்கு நிதிஉதவி வழங்குவதற்கு இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகிறது. தேசிய மட்டத்தில் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக சுகாதார அமைச்சு உள்ளது. போசாக்கின்மை மற்றும் தொற்றுநோய் அல்லாதவற்றிற்கான சவால்களிற்கு சிறந்த பொறுப்புகூற இயலக்கூடியவாறு பொதுமக்கள் சுகாதாரத்தின் நியமங்களைத் தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் கிரய மொத்த மதிப்பீடு யூஎஸ்டி 200 மில்லியனுக்கு சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியனாகும். 2013 யூலை 01 இல் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018 செப்தம்பர் 30 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 ஒன்றிணைக்கப்பட்ட நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

சுகாதார அமைச்சின் முடிவடைந்த ஒதுக்கீட்டு கணக்குகளின் பூர்த்தியாக்கலிலிருந்த ஒன்றிணைக்கப்பட்ட நிதி முகாமைத்துவ அறிக்கை நியாயபூர்வமாகத் தயாரித்து சமர்ப்பிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான நிதிப் பிரமாணங்கள் திறைசேரியால் விநியோகிக்கப்படும் சுற்றறிக்கைகளை தெரிவு செய்வதும் பயன்படுத்துவதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தன. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்

கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன். ஆகையினால், எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான சுகாதார அமைச்சால் ஏற்பட்ட செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம் செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கொள்வனவுகளை இணங்கானல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் சுகாதார அமைச்சினால்பேணப்பட்டிருந்தனவா என்பதும்.

(இ) கடனின் கீழான மீளெடுப்புக்கள் நிதிஉடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் சுகாதாரத் துறையின் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்.

(உ) நிதிப் பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2013 திசெம்பர் 06 திகதிய 233/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒன்றிணைக்கப்பட்ட நிதி முகாமைத்துவ அறிக்கை தயாரிக்கப்பட்டது என்பதும்.

(ஊ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப முற்பணங்கள், மீள் பெறுகைகள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன சுகாதார அமைச்சால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் உண்மையாகவும் நியாபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி திகதியிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவெடுகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விபரங்களிலிருந்து எழுந்த சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் ஒன்றிணைக்கப்பட்டநிதி முகாமைத்துவ அறிக்கையானது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரைத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுதத்துவங்களிற்கு இணங்க தரப்பட்டுள்ளன எனவும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன எனவும்,

(இ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப முற்பணம், அதிலிருந்தான பற்றுதல்கள், அதற்கான மீளளிப்புகள் என்பன சுகாதார அமைச்சால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டன எனவும் அத்திகதியின் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டு பதிவேடுகளுடன் திருப்திகமான இணக்கம் செய்யப்பட்டன எனவும்,

(ஈ) நிதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சுகாதார அமைச்சினால் மீளாய்வாண்டிற்கான கிடைக்கப்பெற்ற சகல மூலங்களில் இருந்து பெறப்பட்ட நிதிகளில் ஏற்பட்ட செலவினம் ரூபா 92,994,584,162 ஆகும். மீளாய்வாண்டினற்காக சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கின் சகல நிதி மூலங்களிலிருந்து ஏற்பட்ட செலவினப் பொழிப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| **விபரம்** | **2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது பெறப்பட்ட சகல நில மூலங்களிலிருந்து ஏற்பட்ட செலவினம்** |
|---|---|
| | **ரூபா** |
| ஐடிஏ பங்குபற்றல் | |
| மீண்டெழும் செலவினம் | |
| ஆளணிக்கான வேதனம் | 37,914,758,743 |
| பிரயாணம் | 133,332,183 |
| சேவை | 2,684,174,058 |
| ஐடிஏ அல்லாத பங்குபற்றல் | |
| மீண்டெழும் செலவினம் | 34,827,053,099 |
| மூலதனச் செலவினம் | 17,435,266,079 |
| | 92,994,584,162 |

### 4.2 கட்டுநிதியக் கணக்கு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியால் செயற்திட்டத்திற்காக பேணப்பட்ட 73586 ஆம் இலக்க கட்டுநிதி நிதியக் கணக்கு மீளாய்வாண்டின்போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2012 யூலை 31 ஆம் திகதிய சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09 பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட வளங்கள், செலவின செயற்பாடுகளை சரியாக போது வெளிக்காட்டுவதற்கு மாற்றமடையாது பிரயோகித்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2013 திசெம்பர் 31 இல் சுகாதார அமைச்சினால் எல்லா மூலங்களிலும் பெறப்பட்ட நிதியில் ஏற்பட்ட ரூபா 92,994,584,162 மீள் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டு மொத்த செலவின ஒன்றிணைக்கப்பட்ட முகாமைத்துவ அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 5.2 நிதிப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான எவ்வித நிதிகளும் மீள் நிரப்பு செய்யப்பட்டிருக்கவில்லை எவ்வாறாயினும் ஒன்றிணைக்கப்பட்ட முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் பங்குபற்றலின் கீழ் மீண்டெழும் செலவினம் ரூபா 40,732,264,993 ஆகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் சுகாதார அமைச்சிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 800,000,000 05 மீண்டெழும் விடயம் மற்றும் 01 மூலதனவிடயத்தின் கீழ் செலவினைச் செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து செயற்பாடுகளுக்காக பெறப்பட்டதிலிருந்து ரூபா 781,503,258 சில விடயங்களின் கீழ் செலவழிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கப்பட்ட விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2013 இற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட செலவினம் |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| மீண்டெழும் செலவினங்கள் | | |
| வைத்தியசாலை புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி | 135.00 | 134.94 |
| ஆதார வைத்தியசாலையின் தர முகாமைத்துவ பிரிவு ஸ்தாபித்தல் | 10.00 | 1.35 |
| தொற்றாத நோய்களின் ஆரம்பமட்ட சுகாதார பராமரிப்பு ஆய்வுகூட சேவைத் தேவைப்பாட்டு அபிவிருத்தி செயற்திட்டம் | 200.00 | 190.61 |
| தேசிய டெங்கு கட்டுப்பாட்டு செயற்திட்டம் | 200.00 | 200.00 |
| உள்ளக நோய்நிலை இறப்புவீத அறிக்கை முறைமையை அமுல்படுத்தல் (ஐஎம்எம்ஆர்) | 5.00 | 4.60 |
| மூலதனச்செலவினம் | | |
| திரிபோச செயற்திட்டம் | 250.00 | 250.00 |
| மொத்தம் | 800.00 | 781.50 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சுகாதார அமைச்சின் வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட எல்லா மூலங்களின் நிதியில் இருந்து மீண்டெழும் மற்றும் மூலதன செலவினமாக

ரூபா 94,972,264,000 பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 1,977,679,838 சேமிப்பாக மீளாய்வாண்டு இறுதியில் அறிக்கையிடப்பட்டுள்ளது என்று அவதானிக்கப்பட்டது.

**5.3 பௌதீக செயலாற்றல்**

இந்த அறிக்கையின் 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு சுகாதார அமைச்சினால் 2013 திசெம்பர் 31 இல் எல்லா வளங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியிலிருந்து ரூபா 92,994,584,162 பயன்படுத்தப்பட்டுள்ளதென ஒன்றிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டிற்கான சுகாதார அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கின் சில பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(அ) சுகாதார அமைச்சு உள்ளக நோய்நிலை இறப்பு வீத அறிக்கை முறையினை ஸ்தாபிப்பதற்காக சுகாதார அமைச்சின் சுகாதார புள்ளிவிபரப் பிரிவு கட்டளைக்கு இணங்க ரூபா 2,301,800 கிரயத்தில் 17 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டது. மதிப்பீட்டு தொழிநுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கையின் பிரகாரம், அந்நோக்கிற்காக 6 கணனிகள் மாத்திரம் தேவைப்பட்டது. சுகாதார புள்ளிவிபரப் பிரிவு 09 கணனிகளை வைத்திருந்தது. 2013 திசெம்பர் 31 இல் அமைச்சின் 6 வைத்தியசாலைக்கு ஏனைய 08 கணனிகளும் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளுடன் தொடர்பற்ற புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்திற்கான சிவில் வேலைகளுக்கான ரூபா 100,914,469 தொகையான பற்றுச்சீட்டுக்களை தீர்ப்பதற்காக செயற்திட்டத்தினால் செலவழிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசுடமையாக்கப்பட்ட கம்பனியால் முகாமைசெய்யப்பட்ட ‘‘திரிபோச’’உற்பத்திக்கான தொழிற்சாலை மற்றும் கம்பனியின் முழு உற்பத்தி மற்றும் தொழிற்சாலை செலவு என்பன சுகாதார அமைச்சால் ஏற்பட்டிருந்தது. அமைச்சு ஒவ்வொரு மாதத்திற்கு தொழிற்பாட்டு செலவு ரூபா 3,000,000 மீளளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கம்பனி மீளளிப்பு செய்யும் காலம் வரை ஏற்பட்ட செலவின விபரங்களைக் கொடுப்பதனை வழமையாகக் கொண்டிருக்கவில்லை.

(ஈ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2013 மார்ச் 08 திகதி கடிதத்தின் பிரகாரம், திரிபோச தொழிற்சாலை பாவனைக்கு 3200 சிசி இயந்திர இயலளவுள்ள இரண்டு டவுல்கப் மோட்டார் வாகனத்தினை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டம் 2,500 சிசி இயந்திர இயலளவு உள்ள ஒவ்வொன்றும் ரூபா 6.000,000 கிரயத்தில் இரண்டு டவுல்கப் மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்தது.

(உ) கணக்காய்வால் சேகரிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 2014 யூன் 30 இல் உள்ளவாறு சுகாதார அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட 39 வைத்தியசாலைகளில் செயற்திட்டத்தினால் ஒரு வைத்தியசாலைக்கு மாத்திரம் அவசரகால சிகிச்சை மட்டத்திலான வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2014 யூன் 30 இல் 16 வைத்தியசாலைகளில் தர முகாமைத்துவப் பிரிவு முழுமையான செயற்பாட்டில் இருந்தது. மேலும் 2014 யூன் 30 இல் சுகாதார அமைச்சிற்கு அடிப்படை தகவல் முறைமை ஊடாக உள்ளக நோய் நிலை இறப்பு வீதத் தரவுகளை 18 வைத்தியசாலைகள் அனுப்பியிருந்தன.